www.padippakam.com

# காகம்

KAKAM



2 Februar 96

படிப்பகம்

www.padippakam.com

# வழக்கு

வழக்காளி: செல்வன். தமிழ்ச்செல்வன்
வயது: 15
வதிவிடம்: டென்மார்க்

எதிரி: திரு. சிகப்பிரகாசம்
வயது: 45
வதிவிடம்: டென்மார்க்கில் 10 வருடங்கள்

திரு.சிகப்பிரகாசத்தின் மூத்தமகனான செல்வன் தமிழ்ச்செல்வன் பல குற்றங்களைச் சுமத்தியிருக்கின்றார்.

அச்சிறுவன் தாக்கல்செய்த இந்த வழக்கில் காகத்தின் இப்பக்கத்தில் வாதிடுவதற்காக முதலாவது குற்றமாக......

"தகப்பனார் திரு.சிகப்பிரகாசத்தார் செல்வன் தமிழ்ச் செல்வனை வீட்டினுள் பூட்டிவைத்து தாக்கியது" குற்றமா? குற்றமில்லையா?

எங்கே வாசகர்களே!

நீங்கள் உங்களுக்கு விருப்பமான கட்சிக்காக வாதிடலாம்.
உங்கள் கருத்துக்களை காகத்தின் ஒருபக்கத்திற்கு மேற்படாதவாறு எழுதி 15.02.96 ற்குப்பிந்தாமல் காகத்தின் முகவரிக்கு அனுப்பிவையுங்கள்.

ஆசிரியர்....... தாகம்



படிப்பகம்

www.padippakam.com

# காகம்

"முற்றமெல்லாம் புழுங்கல்- அ:தனால்

நம் நெஞ்சமெல்லாம் அம்முற்றம்."

– ஒரு தாய்

## கருத்தறிந்த காகம்

1995 தைமாதத்திலிருந்து காகம் என்கின்ற இந்த மாசிகை தொடர்ந்து வெளிவந்து 1996 ம் ஆண்டினை ஆரம்பித்தவேளை இந்த ஓராண்டுகாலம் பற்றிய ஒரு விமர்சனமும் அதன்வழி வாசகர்ளின் கருத்துக்களை அறிந்து அந்தக் கருத்துக்களை உள்வாங்கி அதனூடாக காகத்தின் எதிர்காலத்தை திட்டமிடவேண்டும் என்னும் நோக்கில் செ[illegible] [illegible]3.02.1996 அன்று ஒரு ஒன்றுகூடலை டென்மார்க்கில் [illegible]iborg நகரத்தில் டனிஸ் அகதிகள் உதவிச்சங்கத்தின் அனுசரணையுடன் ஒழுங்குசெய்திருந்தது காகம்.

அன்றையதினம் சீரற்றகாலநிலையாக இருந்திருந்தும் அக்கறையோடு கலந்துகொண்ட அனைவருக்கும் காகம் நன்றிசொல்லிக் கொள்கின்றது.அன்றையதினம் பரிமாறப்பட்ட கருத்துரையாடல்கள் எல்லாவற்றையும் இங்கு பரிமாறிக்ௌள்வது என்பது சாத்தியமற்ற விடைமாகும்

ஆனால் [illegible]மாக அன்[illegible]



படிப்பகம்

www.padippakam.com

உள்வாங்கிக்கொண்ட விடையங்களை இங்கு பகிர்ந்துகொள்ளல் வேண்டும்.

வழமையாக நடைபெறும் அதிஉயர்வுப்பாணியிலான புகழ்பாடிக்கலையாமல் அன்று வாசகர்கள் தத்தமது அபிப்பிராயங்களை ஒருவிவாதமாக அல்லாமல் ஒரு நட்புணர்வுடன் கருத்துக்களை விவாதித்தது ஒரு ஆரோக்கியமான விடையமாக இருந்தது.

காகத்தில் வாசகர்கடிதங்கள் இடம்பெறாமல் தவிர்க்கப்பட்டு வருவதும் ஆராயப்பட்ட விடையங்களில் காகத்திற்கு பிரயோசனமளிக்கும் வகையில் அமைந்தது.

காகத்தில் அடிக்கடி வலியுறுத்திவந்த" நமது தாயத்தில் கிராமாபிவிருத்தித்திட்டங்கள் தொடர்பாக நீண்டநேரம் ஆராயப்பட்டிருந்தாலும் அதற்கான ஒரு செயற்திட்டக்குழுவை அமைக்காதுபோனாலும் இந்த விடையத்தை எதிர்காலத்தில் நண்பர்கள் மத்தியில் விளங்கவைத்து ஒரு ஆக்கபூர்வமான விளக்கத்தோடான செயற்திட்டமொன்றினை வகுத்துக்கொள்ளவேண்டுமென்ற நிலையில் அவ்விடையம் முற்றுப்பெற்றது.

இந்தவிடையத்தில் காகத்திற்கும் உடன்பாடுண்டு. இதுதொடர்பாக அக்கறையுள்ள நண்பர்களை இணைத்துக்கொள்வதற்கான பணிகளை 1996 ல் காகம் செய்யத்திட்டமிட்டுள்ளது.

மேலும் காகத்தில் குழந்தைகளுக்கான பகுதிகள் இடம்பெறுவதில்லை என்ற சுட்டிக்காட்டலும் நமது கவனத்தை ஈர்த்தவிடையமாகும். இதுதொடர்பாக காகத்தின் இன்றைய சஞ்சிகை வடிவத்துள் குழந்தைகள் பகுதியை இணைப்பதில் பல சிரமங்கள் உள்ளன. ஆனால் "சஞ்சீவி" ஆசிரியர்குழுவினர் ஒரு திட்டத்தினை முன்வைத்தனர். அதாவது டென்மார்க்கில் வெயிவந்து கொண்டிருக்கும் தமிழ்ச்சஞ்சிகைகள் ஒன்றுசேர்ந்து சிறுவர்மலர் ஒன்றினை வெளிக்கொணர்வது பற்றியதாக அவர்களது திட்டம் அமைந்திருந்தது. அதற்கமைவாக அன்றையதினம் சமூகமளித்திருந்த "கற்பகம்" ஆசிரியர்குழுவினரும் இத்திட்டத்திற்கு சம்மதம் தெரிவித்தனர்.

காகத்திற்கும் இந்தவிடையத்தில் அக்கறையுண்டு. இத்திட்டத்திற்கான ஒரு செயல்வடிவத்தினை கட்டமைப்பதற்கான முன்முயற்சிகளில் " சஞ்சீவி" குழுவினர் தற்போது ஈடுபட்டுள்ளார்கள். இதற்கான வேலைத்திட்டம் வெற்றியளிக்கும் பட்சத்தில் சிறுவர்மலர் ஒன்று வெளிவர நிறைய வாய்ப்புகள் தென்படுகின்றது.அத்துடன் அன்றையதினம் இடம்பெற்ற கருத்தரங்கத்தில் கருத்துரைவழங்கியவர்களுக்கும் காகம் நன்றிகூறிக்கொள்கின்றது.

■

உள்ளே......


| பக்கம் | விடையம் |
|---|---|
| 02 | வழக்கு |
| 3 | முகம் |
| 05 | சரியாசனம் |
| 08 | மலர்தல் வாடல் தெரிதல் |
| 10 | தைப்பொங்கல் |
| 12 | குடையும் தடியும் |
| 14 | வரலாற்றுக்கு ஒரு கடிதம் |
| 18 | H.C.Andersen கதை |
| 21 | எரியும் பிரச்சனை |
| 23 | பொருத்திக் காண்பது போட்டி |


ஞாபகப்படுத்துகின்றது ........ காகம்

1996 ம் ஆண்டிற்கான காகத்தின் சந்தாப்பணத்தை செலுத்தி காகத்தை தொடர்ச்சியாகபெற வசதிசெய்யுங்கள்.

இன்னமும் சிலர் 1995 ம் ஆண்டிற்கான சந்தாவை செலுத்தாதிருக்கின்றீர்கள் என்பதனையும் ஞாபகமூட்டி..........

காகம் மாசிகையை தொடர்ந்து வெளிவருவதற்கு உதவும்படி அன்புடன் வேண்டுகின்றது காகம்.

அத்துடன் உங்களுக்குத் தெரிந்த நல்லதொரு வாசகரை காகத்திற்கு அறிமுகம் செய்து உதவுங்கள்.

காகம்



படிப்பகம்

www.padippakam.com

# சரியாசனம்

நெடுங்கதை

முல்லையூரான்



மாசி

புதியவீடும், புதியசூழலும் எனக்குச் சற்று வெறுப்பைத்தந்தாலும் டனிஸ்மொழிப்பாடசாலைக் குச்சென்றுவருவதும், அன்றாட சமையல்வேலை, வீடு ஒழுங்காக்கல் என்றவேலைகளில் தனிமை பெரிதும் தெரியவில்லை.வீட்டு முகவரிமாற்றியதால் இன்னமும் இலங்கைக்கடிதங்கள் ஏதும் வரவில்லை. அதனால் மனதுக்கு ஏதோஒருமாதிரித்தான் இருக்கிறது. அதுவும் இப்போது இலங்கையில் சரியான பிரச்சனை நடந்துகொண்டிருக்கிறது. எனது ஐயாவும் எனது இரண்டு சகோதரிகளும் எங்காவது தற்பாதுகாப்பான இடங்களுக்கு இடம்பெயர்ந்திருந்தனர். எனது அம்மா எனது குழந்தைப் பருவத்திலேயே இறந்துவிட்டாள். பிற்காலங்களில் நானும் தொடர்ந்து



படிப்பகம்

www.padippakam.com

பாடசாலைக்குச் செல்லமுடியாமல் வீட்டோடு வீட்டு வேலைகளிலும், ஐயாவோடு தோட்டவேலைகளிலும் ஈடுபட்டுவந்ததனால் அதிகமாக ஏதும் பெரிதாகப் படிக்க இயலவில்லை. என்னைப்போல பல பெண் பிள்ளைகள் இப்படித்தான் தமது எதிர்காலத்தை இழந்து வறுமையில் வதங்கியவண்ணம் இன்றும் உள்ளனர்.

அதுவும் இன்றைய யுத்தசூழலில் இத்தகைய அடிமட்டவாழ்க்கைத்தரமக்களது வாழ்வு மிகவும் அவலமாக உள்ளது.

இன்று நானும் ஐயாவோடும் எனது தங்கைகள் இருவரோடும் இருந்திருந்தால் அவர்களுக்கு எவ்வளவு ஆறுதலாக இருந்திருப்பேன்.

அதுதவிரவும் ஐயாவின் ஒரேஒரு சொத்தாக இருந்த அந்த மூன்றுஏக்கர் வயற்காணியையும்கூட எனது கணவன் ரவிகுடும்பத்தினர் சீதனமாக வாங்கிக்கொண்டுவிட்டார்கள். நானும் திருமணம் என்ற வலைக்குள் சிக்காதிருந்திருந்தால் அந்த வயலாவது ஐயாவின் கையில் இருந்திருக்கும். அவருடைய சீவியத்திற்கும் அது பெரிதும் உதவியிருக்கும்தானே.

பெருமூச்சுஎன்னிலிருந்து வெளிப்பட்டு போகிறது. இப்போது எனது கண்களிலிருந்து வழியும் நீரை நான் துடைத்துக்கொள்கின்றேன். குசினி மேசையைத்துடைத்துவிட்டு கோப்பிபோடும் இயந்திரத்துள் தண்ணீரை ஊற்றி....கொதிக்கவைத்து விட்டு ஜன்னல்வளியே வெளியே அவள் வருகின்றாளா என்று பார்க்கிறேன்.

அவளை எனது கண்கள்பாக்கும்தூரம்வரை காணவில்லை. சொன்னபடி சொன்னநேரத்திற்கு "காயா" வந்துவிடுவாள். அவள்சொன்ன நேரத்திற்கு இன்னமும் 10 நிமிடங்கள் இருந்தன.

மீண்டும் அவளை வரவேற்பதற்கான அலுவல்களில் ஈடுபடுகின்றேன்.

டனிஸ்காரருக்கு வடை என்றால் விருப்பம். அதனால் அவளுக்காக இன்று சுட்டுவைத்ததை ஒரு பளிங்குத்தட்டில் எடுத்து அடுக்கி சோபாமேசையில் வைத்துவிடுகிறேன். கோப்பி, வடை,,சீனி, பால் என்று ஒரு கோப்பிவிருந்துக்கான சாமான்களை வைத்து நடுவில் ஒரு அழகிய பூங்கொத்தினையும் அழகாகவைத்துவிட்டு கதவோரம் அவளுக்காக நிற்கிறேன்.

இன்றைக்கும் "ரவி" என்னிடம் சொல்லிக் கொள்ளாமலேயே மகள் அருவியையும் கூட்டிக்கொண்டு போய்விட்டார்.அவரும் இல்லாதது நல்லது.

"காயா"வோடு எனக்குத்தெரிந்த டனிசில் கதைக்கலாம். அல்லது எனக்கு டனிஸ் கதைக்கத்தெரியாது என்று மட்டம்தட்டி எனது வாயை மூடிப்போடுவார்.

"கயா" எவ்வளவு நேரம் இருப்பாளோ தெரியாது? அவள் என்னுடன் அவ்வளவாகப்பழக்கமில்லை. ஆனால் நாங்கள் இருக்கிற இந்த வீட்டுக்கூட்டத்துக்குள்ளேதான் அண்மையில் இருக்கிறாள். நாங்கள் இந்த வீட்டுக்கு வந்தபோது அன்றே வந்து வாசலில்நின்றே பூக்கன்றொன்றைத் தந்து என்னை மகிழ்வித்தவள்.

அவள் நல்லவளாகத்தான் இருப்பாள்.பார்வைக்கு வெள்ளைத்தோல்தான்.ஆனால் என்னைப்போலவே மெலிந்தும்,களைப்படைந்தமுகமுமாய் தெரிந்தாள். பெரும்பாலும் இப்படியான டனிஸ்காரர்கள்தான் எங்களைப்போல அகதிகளோடு நெருங்கிப் பழகுகின்றார்கள்.

வீட்டுக்குவெளியே கார்ஒன்று கடந்துசெல்கிறது. மீண்டும் ஓடிவந்து நேரத்தைப் பார்க்கிறேன். மணி10. கதவடிக்கு மீண்டும் செல்கிறேன்.

காயா வருகிறாள்.

கைகொடுத்து வரவேற்க அவளை அணுகுகிறேன். ஆனால் காயாவோ கையில் வைத்திருந்த அந்த பிளாற்றிக் பையையும் சேர்த்துப்பிடித்தபடியே கைகூப்பி வணக்கம் செய்கின்றாள்.

எனக்கு ஒரு மாதிரியாகப்போய்விட்டது.

சேலை முந்தானையைச் சரிசெய்தபடி கைகூப்பி வணக்கம் தெரிவிக்கின்றேன்.

இருவரும் அமர்ந்துகொள்கின்றோம்.

ஊற்றிய கோப்பி ஆவிபறத்தியது.

∴∴

பெயர் கலாமதி. கலாவென்று சொல்வார்கள்.வயது35. இலங்கையின் வடபகுதியிலிருந்து வந்தவள் நான். ஐயாவும் எனது இரண்டு தங்கைகளும் இலங்கையிலேயே வசிக்கின்றனர்.

"என்ன....இன்னொருமுறை சொல்லுங்கள் என்று தெளிவாக விளங்கிக்கொள்கிறேன்.....ஓமோம்...அந்தே யுத்தம் நிகழ்கிறது. அதனால்தான் இடம்பெயர்ந்து டென்மார்க்கிற்கு வந்தோம்," என்று காயா கேட்கக்கேட்க பதில்சொல்கிறேன்.



படிப்பகம்

www.padippakam.com

"யுத்தம் என்றால் பிரிவும், இழப்புகளும் கட்டாயம் இருக்கும்தானே" என்ற எனது பதிலுக்கு காயா முகத்தை இறுக்கிக்கொள்கிறாள்.

"டனிஸ்மொழி கடினமானதொரு மொழிதான்.ஆனால் படிக்க முயல்கிறேன்." என்று நான்சொன்னபோது காயா இன்னொருவடையை எடுத்து சாப்பிடுகிறாள்.

டென்மார்க்கில் என்ன செய்கிறதோ?
"எனக்குத்தெரியாது.நான் இந்தநாட்டில் என்னதொழில் செய்வேன் என்று எனக்குத்தெரியவில்லை ஆனால் நான் எனது குழந்தை அருவியைப் பார்த்துக்கொண்டு வீட்டில் கணவனுக்கு உதவியாக ஒரு வீட்டுஅம்மாவாக இருக்கச்சொல்லியே எனது கணவரும் சொல்லியிருக்கிறார்." என்று நான் சொன்னபோது .....
காயா "உனது விருப்பங்களில் அவன் எப்படி தலையிட முடியும்?
நீயல்லவா உனது எதிர்காலத்தைத் தீர்மானிக்கவேண்டும்" என்று சொல்கிறாள்.
இவளுக்கு நான் தமிழ்ப்பெண்கள் விவகாரத்தை எப்படி விளங்கவைப்பது ? என்று யோசித்துக்கொண்டிருக்கும்போது
காயா ஒரு சிகரட்டை எடுத்து மூட்டிக்கொண்டே என்னிடமும் ஒன்றை நீட்டுகின்றாள்.
தலையை ஆட்டியபடியே மறுத்துவிடுகிறேன்.

சாப்பாட்டுமேசை மூலையிலிருந்து தொடங்கி அடுத்தசுவரோடு நிற்கும் றியோல்வளியாக காயாவின் கண்கள் வந்து ரீ.வி,டெக் அந்த பெரிய வானொலிப் பாட்டுப்பெட்டி என்று தொடர்ந்து.....சுவரில் தொங்கிக்கொண்டிருக்கும் சாயிபாபா படத்தையும் பார்த்து .....குசினிமேசையில் இருக்கும் சாமான்களையும் நோட்டம் பார்த்து தான் உட்கார்ந் திருக்கும் அந்த புத்தம்புதிய பூப்போட்ட விலையுயர்ந்த சோபாவையும் கைகளால் தடவிப் பார்த்துக்கொண்டே கால்களால் நிலத்தில் விரிக்கப்பட்டிருந்த கம்பளத்தை உரசியபடி காயா கேட்கிறாள்.
" நீ மிகவும் வசதியாகத்தான் டென்மார்க்கில் இருக்கிறாய் என நான் நினைக்கிறேன்.
நல்லது.
உனது கணவன்கூட நல்ல விலையுயர்ந்த கார் ஒன்றும் வைத்திருக்கிறானல்லவா?
டென்மார்க்கில் நீங்கள் வசதியாக வாழ்கின்றீர்கள். என்று மீண்டும் சொல்லியபடி சிரித்துக்கொண்டே புகையை உள்ளை இழுத்து ஊதுகின்றாள்.
எனக்கோ ஒருமாதிரியாகிறது. கறுத்துப்போன முகத்தை திருப்பிக்கொண்டு அவளுக்கு கோப்பி ஊற்றும் கடமையில் ஈடுபடுகிறேன்.
இவள் எப்போது போவாள் என்றமனநிலைக்கு நான் வந்துவிட்டேன்.
மணிக்கூட்டை அடிக்கடி பார்த்துக்கொள்கிறேன்.
காயா பதட்டமின்றி உட்கார்ந்திருக்கிறாள்.
கோப்பியை அருந்துவதும்சிகரட்டைப்பற்றுவதுமாக இதற்குள் வடை எப்படிச்செய்வது என்றும் ஆவலுடன் கேட்டுத்தெரிந்துகொள்கிறாள்.
எனக்கோ களைத்துப்போனமாதிரி உணர்வு.
தேவையற்ற ஒருத்தியை வீட்டுக்குள் அழைத்துவிட்ட தவிப்பு.

"நாங்கள் வரும்போது ஒன்றுமில்லாதவர்களாகவே வந்தோம். நீ சொல்வதும் சரிதான். நாங்கள் இப்போது வசதியாகத்தான் டென்மார்க்கில் வாழ்கிறோம்.
ஆனால்......என்று இழுத்து......
இந்தப்பொருட்களை எல்லாம் கடனுக்கே வாங்கிவைத்திருக்கிறோம்..." என்று பொய்சொல்லி அவளை சமாதானப் படுத்துகின்றேன்.

"இல்லை இல்லை.....எனக்கு எவ்வளவு சந்தோசமாக இருக்கிறது தெரியுமா?
யுத்தத்தால் நீங்கள் எல்லாவற்றையும் இழந்து எங்களது நாட்டுக்கு இடம்பெயர்ந்து வந்தாலும் ஒரு குறுகிய காலத்துள் இவ்வளவு வசதியையும் நீங்கள் தேடிக்கொள்ளும்படியாக எமது நாடு வசதியாக இருப்பதிலும் ,உங்களுக்கும் உங்களது எதிர்காலத்திற்கும் டெனிஸ் மக்களாகிய நாங்கள் பொறுப்புள்ளவர்களாக இருக்கின்றோம் என்பதிலும் எனக்கு மட்டற்ற மகிழ்ச்சியே ஏற்படுகின்றது."
ஆனாலும் எனக்கு ஒரு விடையத்தை நினைத்தால் மனவருத்தம் ஏற்படுகின்றது.
"பாவம் நீங்கள் பிரிந்து வந்த உறவுகளையும், நண்பர்களையும் உங்களது அழகிய நாட்டையும் இழந்துவிட்டீர்களே. அதை ஈடுசெய்யும்படியாக எம்மால் உதவமுடியாமல் இருக்கிறதே என்பதுதான்" அது "என்றாள் காயா.
எனக்கு இப்போது வெட்கமாக இருந்தது.

தொடரும்.....



படிப்பகம்

www.padippakam.com



மலர்தல்
வாடல்
தெரிதல்......................................பூமி

18ம் நூற்றாண்டில் தமிழகம் முழுவதும் பயணம் செய்தபடியே தமிழ்மொழியை முழுமையாக கற்றுணர்ந்த யேர்மனியன் "கார்ல் கிரவு" லுக்கு இருந்தநோக்கின் ஆர்வமே அவனை தமிழ்அறிஞனாக்கியது.

மிசனரிமார் காலத்தில் தமிழ் கற்றுக்கொண்ட பாதிரிகளுக்கும் ஒரு நோக்கமிருந்தது.

ஆனால் நான் நோக்கமொன்றிற்காக....வாழ்வியலின் நோக்கிலிருந்தல்லவா நோக்கமற்றதோர் அகதிவாழ்வில் சிக்குண்டேன்.
"கார்ல் கிரவுல்" போல எந்த நூல்களை களவாடவந்தேன்?
அல்லது எந்த மதத்தை இந்தமக்களிடை பரப்பவந்தேன்?

குளிர்காலத்துப் பறவைகள் போலல்லவா அன்னியமாகினேன்.

டனிஸ் மொழியை கற்றலென்பது இலகுவான ஒரு காரியமாகத் தெரியவில்லை.
இரைப்பை இல்லாத ஒருவனுக்கு சாப்பாடு கொடுப்பதுபோல....

நோக்கமற்றும், குறிக்கோளின்றியும் வெற்றுவெளியொன்றில் அகதியானநிலையில் எதிர்காலமென்பதே சூனியமானபின்பு எல்லாமே வெறுத்துப்போனது. கற்றலும்தான்.

இப்போதெல்லாம் கவிதைகள் என்னைச்சூழ்ந்திருந்தன. மனதுக்குள் அவை அப்படியே தேடுவாரற்றுக் கிடந்து நசிந்தன. எனது கவிதைக்கே இந்தநிலையென்றால் ....
நோக்கமற்றதான டனிஸ்மொழிக்கல்வி எங்கே எனக்குள் எப்படி புகுரப்போகின்றது. அதுவும் இந்த வாலிபவயதில்லாத பருவத்தில்.

எனக்கு எதுவுமே வேண்டாமென்றாகி கனநாட்கள் ஆகிவிட்டன. டனிஸ் மொழியையும் சேர்த்துத்தான்.
ஆனாலும்
என்னை டனிஸ்மொழி பேசவைப்பதில் இந்த நாடு படாதபாடுபட்டுக்கொண்டிருந்தது.
அறைக்குள் கல்வி சலிக்குமென்று அடிக்கடி சுற்றுலாக்களை ஒழுங்குசெய்தனர்.
அன்றும் ஒரு சுற்றுலா.
டென்மார்க்கில் "பீர்" மதுவகை உற்ப்பத்தி செய்யும் ஒருபெரிய தொழிற்சாலைக்கு அழைத்துச் செல்லப்பட்டிருந்தோம்.
கோதுமையை ஊறவைத்து புளிக்கச்செய்யும் பெரியபெரிய குதங்களிலிருந்து வரிசைவரிசை



படிப்பகம்

www.padippakam.com

யாக "பீர்" தயாரிக்கும் செய்முறைகளை எடுத்து விளக்கியபடி.....ஒருவழிகாட்டி எங்களை அந்த பெரிய கட்டடத்தினுள் இழுத்துச்சென்றான்.
எல்லாரோடும் நானும் தொழில்வளர்ச்சிபற்றி பிரமித்துக்கொண்டபடி அவர்கள் பின்னால் இழுபட்டுக்கொண்டிருந்தேன்.

என்ன அழகு!
அதோ! போர் ஒன்றில் குதிரைப்படை, யானைப் படையென்று நடத்தியதுபோல .......
வரிசை வரிசையாக.....ஒழுங்காக சமவேகத்தில் ......"பீர்" அடைக்கப்பட்ட போத்தல்கள் உருளும் பட்டிகளில் நகர்ந்து கொண்டிருந்தன.
வளைந்து வளைந்து செல்லும் அப்போத்தில் படைகள் ஆங்காங்கே தரித்து மூடிமூடல், லேபல் ஒட்டல் எனும் பல்வேறு கிரிகைகளைத் தாண்டிச் சென்றுகொண்டிருந்தன.

அவைசெல்லும் பாதையில்தான் அவன் இருந்தான்.
பெரியவண்டி, எனதுகாலைவிடப் பருமனான அவனது கைகள்,உப்பியமுகம்,தொழிற்சாலையின் அடையாள ஆடைக்குள் அகப்பட்டு ஒரு பெரிய கதிரையில் இருந்தான்.

உட்கார்ந்திருந்த அவனது கையில் ஒரு இரும்பு இருந்தது;செங்கோல்போல.
ஒரு குறிப்பிட்ட நேரத்துக்கு ஒருதடவை ஏதோஒன்றை இலக்காகத்தட்டிக் கொண்டிருந் தான்.அந்தப்பெரிய தொழிற்சாலையின் அப்பெரிய பகுதிக்குள் போத்தல்களின் சலங்கைச் சப்தத்துள் அவன் ஒருவனே உயிரோடு இருந்தான்.
கண்கள் அரைச்சாக்கண்டிருந்தன.
ஆனாலும் அவன் தொழிலில் கவனமாக இருந்தான்.
எத்தனைவருடமாக தட்டிக்கொண்டிருக்கின் றானோ? என்ற நினைவோடு எனது ஆசிரியை அணுகினேன்.
"என்ன என்றாள் ஆசிரியை.
"இப்படி ஒரு தொழில் செய்வதற்கும் டனிஸ் மொழி அவசியமா?" எனவினவினேன்.
அவள் பதில்சொல்லாது சிரித்தாள்.
இன்று இவன் செய்யும் அந்த இடத்துக்கு ஒரு இயந்திரம் வந்துவிட்டால் அவனையும் தொழில்நுட்பம் வீட்டுக்குத் துரத்திவிடும்.

நினைவுகள் வழமைபோல ஊர்திரும்பின.

....அப்போதெல்லாம் எனது கிராமத்தில் ஐஸ்கிரீம் விற்றுக்கொண்டு வருகின்ற .........
அந்தக் கட்டைக் காற்சட்டையும்,வெள்ளை தோள்வரையான பெனியனும் அணிந்துகொண்டு கையில் மணிஒன்றைக் கிலுக்கியபடி....சைக்கிளில் வரும் சங்கரன் ஞாபகத்தில் வந்தார்.
அவர் ஒரு வயதானவர்.
ஒரு குழந்தைகள் தோட்டத்திற்கே தந்தையான ஒரு ஏழைத்தொழிலாளி.
ஐஸ்பழத்தயாரிப்பையும் அதனை கிராமம் கிராமமாக விற்றுப்பிழைப்பதே அவரின் சீவியம்.

காலஓட்டத்தில்....
ஐஸ் பழத் தொழிற்சாலை ஒன்று உருவாக...வண்ணவண்ண மின்விளக்குகள் நெளிய...வர்ணம்பூசப்பட்ட அழகிய மின்ரதங்கள் சினிமாப்பாட்டுகளோடு குச்சொழுங்கைகளிலும் நுழைந்துகொண்ட காலம்........
சங்கரனையும்,அவரது கறள்பிடித்த சைக்கிளும் அந்த மணியோசையும் என் காதுகளில் இல்லாமற்போனது.
ஐஸ்பழ மின்ரதத்தை சபிப்பேன்.அந்த ஏழைச் சங்கரனுக்காக கவலைஉறுவேன்.
தொழிற்சாலை இல்லாத பிறிதொரு கிராமத்தை த்தேடி அவர் போய்விட்டதாக பின்னர் அறிந்து கொண்டேன்.

அந்த சங்கரனின் நினைவோடு......எதிர்காலத்தில் எந்தத் தொழிற்சாலைக்குள் என்னையும் என்கவிதையையும் புதைப்பார்களோ என்ற பயத்தோடு காற்றில்தற்காலிகமாக கலந்தேன்.



படிப்பகம்

www.padippakam.com

# தமிழர் திருநாள் தைப்பொங்கல் !

மோகனன்

பண்டைநாட்தொட்டு தமிழர் வாழ்வோடு இரண்டறக் கலந்துபோன திருநாள் பொங்கல் பண்டிகை. பகுத்தறிவால் எல்லைக் கோடிட்டு, தன்னை விலங்கிலிருந்து வேறுபடுத்திக் கொண்ட மனிதன் நாளடைவில் வழிபாட்டு முறைமைகளையும் தனது வளர்ச்சியோடு சேர்த்தே மாற்றியமைத்து வந்தான். முதலில் அச்சத்தாலும் : பின்னர் அன்பாலும் : அடுத்து நன்றியாலும் இயற்கைமீது வழிபாடு கொண்டிருந்தவன் காலவோட்டத்தில் தான் கண்ட இயற்கை வழிபாடுகளுக் கெல்லாம் மெல்ல மெல்ல இறைமை கற்பித்துக் கொண்டான். இத்தகைய மாற்றங்களால் பல புதிய வழிபாட்டு முறைமைகள் உருவெடுத்தன. முன்னர் மாரி காலமெனப் பெயர் கொண்ட மழை வழிபாடே பின்னர் மாரியம்மன் வழிபாடாக உருவாகியது போல பல காரியங்கள் நடைபெற்றன. இவ்விதம் தமிழர் வாழ்வில் நிகழ்ந்த சமயங்களின் பிரவேசத்திற்கு முன்பேஅவர்தம் ஆதி விழாவாகத் தோற்றம் பெற்று : இன்று வரை மேன்மையுடன் கொண்டாடப் பட்டு வருதே பொங்கல் பண்டிகையாகும்.

தமிழ்க் குடியின் தொன்மையையும் : பண்பாட்டையும் மாற்றார்க்கு அடையாளம் காட்டும் உன்னதமான இப் பண்டிகையில் நெல்லின்குதிர் போல எண்ணற்ற அர்த்தங்கள் இறைந்து கிடக்கின்றன. பழையன கழிந்து புதியன தேடும் மாண்பு : உழைப்பால் உயர்வுதேடும் மேன்மை : அழுக்கற்றவீரம் : நன்றி கொல்லா நேரிய வாழ்வென நினைக்கும்தோறும் அறுத்தெடுத்த செங்கரும்பாய் இனிக்கும் கருத்துகளால் நிறைந்ததே தைப் பொங்கலாகும்.

உடம்பிற்கு எப்படி உணவு ஆதாரமாக அமைகிறதோ ? அதுபோல உயிருக்கு ஊதியமாகவும் அதை வளர்க்கும் சக்தியாகவும் அமைவன உழைப்பும், தொண்டுமேயன்றி வேறொன்றல்ல. அந்த உழைப்பே சமுதாயத்தின் தூண் என்கிறார் வள்ளுவர். உழுவதனால் துன்புறும் பூமியால்தான் பயிரையும் : அதன் மூலம் தானியத்தையும் தரமுடிகிறது. அதுபோல தன் இன்பம் விழையாது: உடல் வருந்தி, உழைத்து துன்பத்தை வரவேற்றுத் தொழில் புரியும் ஒருவனே மாற்றார் துன்பத்தை நீக்கும் தூணாக எழுகின்றான். எனவேதான் உயிர் செழிக்கும் உழைப்பைப் போற்றுவதற்குரிய திருநாளான பொங்கல் பண்டிகையே தமிழர் திருநாளுமானது.

கடவுள் வாழ்த்து முடிந்தகையோடு திருக்குறள் வான்சிறப்புப் பற்றியே பாட முனைந்தது முதற்கொண்டு, "மாமழை போற்றுதும் மாமழை போற்றுதும் " என்னும் சிலப்பதிகாரப் பாடலீறாக, பண்டைய இலக்கியங்களெல்லாம் உழவுத் தொழிலையும், இயற்கையையும் ஒன்றாகவே இணைத்துப் பாடி மகிழ்ந்தன. முன்னோர் மழை நீரையும், ஆற்று நீரையும், குளம் குட்டைகளையும் நிரல்பட அறிந்திருந்த போதும்: வரட்சிக்கும் வளத்திற்கும் அடிப்படை வானமே! என்பதில் என்றுமே குழப்பமடையவில்லை.



படிப்பகம்

www.padippakam.com

ஆகவேதான் தமிழர் வழிபாடெல்லாம் வான் நோக்கி அமைந்தன: சமயங்கடந்த இயற்கையின் நேசிப்போடு மலர்ந்தன. எத்தனையோ பண்டிகைகளைக் கொண்டாடினாலும்: அவையனைத்தும் பெறத்தவறிய முக்கியத்து வத்தை பொங்கல் பண்டிகை பெற்றுக் கொள்ள இவையே காரணமானது. தொன்றுதொட்டே ஏரும், கலப்பையுமே பண்டைத் தமிழரின் புனிதப் பொருட்களா யிருந்தன. இவ்விரண்டையுமே சுதந்திரத்தின் உண்மைச் சின்னங் களாகவும்: மதிப்பையும், அறத்தையும் நல்குவனவாகவும் அவர்கள் போற்றி மகிழ்ந்தனர். என்பதை மானுடவியல் ஆய்வுக்ளின் வழி அறியக்கிடக்கிறது.

சூரியனுக்கு நன்றிசெலுத்தி, உழவுக்கும் தொழிலுக்கும் வந்தனை செய்யும் சூரியப் பொங்கல் தைமாதம் முதலாம் திகதி இல்லங்கள் தோறும் கொண்டாடப் பட்டாலும்: பண்டை நாட்தொட்டே இது நான்கு தினங்களுக்குரிய பண்டிகையாகவே இருந்துவந்திருகிறது. பொங்கலுக்கு முதல்நாள் போகிப் பண்டிகை. அடுத்தநாள் மாட்டுப் பொங்கல், இறுதிநாள் கன்னிப் பொங்கல் அல்லது காணும் பொங்கல் என்று நான்கு தினங்கள் கொண்டாடப் பட்டதே பொங்கலின் பழைய மரபாகும்.

பொங்கலுக்கு முதல் நாள்வருவது மழைப்பண்டிகை அல்லது மழையைக் குறிக்கும் போகிப் பண்டிகையாகும். வீட்டிலும் நாட்டிலும் உள்ள மாசுகளைப் போக்கி, பழையன போய் புதியன வருவதால் இதைப் போகிப் பண்டிகை என்று கூறுவர். சூரியப் பொங்கலே ஆண்டு முழுவதும் உழைத்த உழைப்பின் பயனை அறுவடை செய்த மகிழ்ச்சியோடு, உழைப்பின் சிறப்பிற்கும்: உணவின் விளைவிற்கும் ஆதாரமான கதிரவனுக்கு நன்றி கூறும் பொங்கலாகும். மறுநாள் மாட்டுப் பொங்கல். அன்றுமாலை காளை மாட்டை அடக்கும் ஜல்லிக்கட்டு அல்லது மஞ்சனக்கட்டு என்னும் வீரவிளையாட்டு நடைபெறும். அறிவின் திறனும்: உடலின் திண்மையும் கலந்து விளைந்ததே தமிழர் வீரம். இதுவே சங்க காலத்தில் காளையை அடக்கிக் கன்னியை மணமுடிப்பதற்குரிய, "ஏறுதழுவுதல்" என்னும் நிகழ்வாக நடைபெற்றது. ஆடவரும் மகளிரும் பல்வகை விளையாட்டுக்களில் ஈடுபட்டு மகிழ்வதும்: பெரியோரிடம் ஆசி பெறுவதுமாக வரும் நான்காவது நாளுக்குரியது கன்னிப் பொங்கலாகும்.

இவ்விதம் உழைப்பாலும்; உயரிய வீரத்தாலும்: களங்கமற்ற இயற்கை யோடு கலந்த வழிபாட்டாலும் முதிர்ந்த இனமாகவும் உலக அரங்கில் தமிழரை அடையாளங் காட்டிநின்றது பொங்கல் பண்டிகையே!. உழவு என்பதின் கருத்தே உருவாக்குதல் என்பதாகும். ஒவ்வொரு மனிதனும் வாழ்வில் ஏதோ ஒன்றை உருவாக்கும் நோக்கில் உழைத்தபடியே வாழ்கிறான். எனவேதான் பொங்கல் பண்டிகை உழைப்போர் எல்லோருக்குமே உரிய திருநாளாகவும்: தமிழரெல்லாம் ஒன்றுபடும் நாளாகவுமிருக்கிறது. இம்முறைவரும் பொங்கலோ விடிலை நோக்கிய பயணத்தில் ஈழத்தமிழினம் எதிரியை நோக்கி முழுமையாகப் பொங்கியெழும் காலத்தில் பொங்குகிறது. விடுதலைக்கான உழைப்பும்: சுதந்திர அறுவடைக்கான காத்திருப்பிலும் மும்முரமாக ஈடுபட்டிருக்கும் ஈழத் தமிழினம் ஒரு

.....................தொடர்ச்சி 20ம் பக்கம் பார்க்க.......



படிப்பகம்

www.padippakam.com

ஒரு நினைவலைதல்

.........................................பாலச்சந்திரன்............

## குடையும் தடியும்

குளிருக்கு ஒதுக்குப்புறமாக உள்ள நாற்காலி ஒன்றில் தலையைச் சாய்த்தபடி என்எண்ண அலைகளை ஓடவிடுகிறேன்.

கடந்தகால நிகழ்வுகளின் எண்ணங்களை அசைபோட்டுப்பார்த்து அதன்மூலமாவது எனது தனிமைக்கு ஒருஆறுதலைக்கொடுக்கலாம் என்ற ஒரு நப்பாசை.

"நீ! எங்க மேல அண்ணாந்துகொண்டு நடந்தே காலால் கல்லுக்கு அடித்தனீ?
இப்பிடி பிளந்துகிடக்"கென்று பூவரசம்குருத்தைச் சப்பி அதைக் காயத்திற்கு கட்டிவிடும் ஆச்சியின் அன்பை எண்ணிப்பார்க்கிறேன்.
வீட்டுக்குள்ளும் சப்பாத்துப்போட்டு நடக்கும் இன்றைய உலகில் வாழ்க்கையில்தான் கல்லடி படுகின்றதே ஒழிய காலில் அல்ல.

"பொடியா! பள்ளிக்குடத்தால வந்து ஆட்டுக்கு குளைவெட்டிப்போடு. மாட்டுக்கும் தண்ணிவை. பேந்தங்க விளையாடப்போறேல்ல. நேரத்துக்கு இருந்து படிக்கவேணும்." இந்த வார்த்தைகளை கேட்டதுபாதி கேளாததுபாதி புத்தகம்,கொப்பிகளை கையில் எடுத்துக்கொண்டு பாண்துண்டை வாயுக்கை மென்றுகொண்டு தெறிஅறுந்த காற்சட்டைக்கு ஊசியைக்குத்திக்கொண்டு பள்ளிக்கூடம் ஓடிச்சென்று பின்வாங்கில் அமர்ந்து சகநண்பர்களுடன் கும்மாளம்கொட்டி பாடத்திலும் அரைகுறையாக கவனம்செலுத்தி கடசிப்பாடம் முடிந்து மணிஅடித்து தேவாரத்துக்கு எழுந்து நின்று "நமப்பார்பதிபதே" சொல்ல அதற்கு "அரகரமகாதேவா" என்று சொல்லிவிட்டு புத்தகத்தை எடுத்துக்கொண்டு யார் முதலில் கேற்றுக்கு வெளியில் போறது? என்ற போட்டியில் ஓடி தடக்குப்பட்டு விழுந்து முழுங்காலும் உரஞ்சி
வீட்டுக்குவரும் வழியில் மாஸ்ரர் வளவு மாமரத்தில் மாங்காய் பிடுங்கும்வேளை மாஸ்ரர்வர நாங்கள் ஓட, பாக்கியநாதன் மாமரத்திலிருந்து குதித்து கால்நடக்கமுடியாமற்போக மாஸ்ரர் "போக்கறுந்தவனே!" என்று திட்டியபடி தன்னுடைய சைக்கிளில் சயிக்கிளில் வீடுவரை கொண்டுவந்துவிட்ட காட்சியை நினைத்தால் இப்போ என்றமாதிரி இருக்கு.

இந்தத் தில்லுமுல்லுகளைத்தாண்டி வீடுவந்து அவசரஅவசரமாக மாட்டுக்கு தண்ணிவைத்துவிட்டு ஆட்டுக்கும் குளை வெட்டிப்போட்டிட்டு பின்னால் வளவுக்கை விளையாடப்போய் கிட்டி புள்ளு, கிளித்தட்டு என்று பலவேறு ஆட்டங்களை ஆடிக்கொண்டிருக்கையில் மழையும் கொட்டத்தொடங்கிவிட்டது.கொட்டும் மழையையும் பாராமல் விளையாடிக்கொண்டிருக்கையில் ....
அம்மாவின் உரத்த அழைப்புக்குரல் பலமுறை ஒலித்தும் கேளாததுபோல விளையாட.....
அம்மா குடைஒரு கையிலும்,சுள்ளித்தடி ஒருகையிலுமாக பிடித்தபடி எனக்கு அருகில்வர அதைக்கண்டு நேரத்திற்கே அழத்தொடங்கினால் அடிவிளாதென்ற எண்ணத்தில் கண்ணைக் கசக்கத்தொடங்கியநேரத்தில் காதில் ஒருமுறுக்குடன் காலில் நாலைந்து அடிவிழுந்துவிட்டது. அடியின்வேதனையால் நானும் அழ இந்தக் காட்சியை ப்பார்த்த மற்றவர்களுக்கும் வீட்டு ஞாபகம் வர ஒவ்வொருவராக கலையத்தொடங்கி



படிப்பகம்

www.padippakam.com

விட்டார்கள். "குடையைப்பிடியடா என்று கையில் குடையை திணித்துவிட்டு சேலைத்தலைப்பால் எனது தலையைத் துவட்டிக்கொண்டு .........

"உனக்கு எத்தனை தடவையடா மோன சொல்லுறது;விளையாடப் போனால் நேரத்திற்கு வீட்ட வரனும் என்றுஉனக்கடிச்சு என்னுடைய கைதான் வலிக்குது.உனக்கு நொந்து நீ திருந்திறதாய் காணம்.எடேய்! கொப்பர் கள்ளுக்குப்போட்டார்.அவர் வருவதற்கிடையில கால்முகத்த கழுவிப்போட்டு வந்து படி. அந்த மனுசன் வந்தால் துள்ளப்போகுது. உங்க கிணத்தில தொங்கித்தொங்கி அள்ளுறேல்ல. கவனமாய் அள்ளிக் கழுவிப்போட்டு வா!" என்று சொன்னவர் தாள்வாரம் அடிச்சுப்போடும் என்று குனிந்துகொண்டு அடுக்களைக்குள் போகின்றா.

நானும் அம்மாவின் கட்டளைகளை நிறைவேற்றிவிட்டு படிக்கப்போகிறேன்.

படிப்பதற்கு புத்தகத்தைத்திறந்தால் பசி வந்து வயிற்றைக் கிள்ள நான் நசிந்து நசிந்து அடுப்படிக்குப்போக அம்மா புறுபுறுத்து "சமையல் நடக்குது உனக்கிண்டைக்கு பத்துமணிக் குத்தான் சாப்பாடு.

மழைவரமுன்னம் விறகை எடுத்து தாவாரத்தில போடவேணும் என்ற யோசனை இல்லை. உனக்கு கண்டறியாத விளையாட்டு.

இந்த ஈரவிறகை ஊதி ஊதி கண்ணும் எரியுது.தொண்டையும் நோகுது. போய்ப்படியடா சமைச்சுப்போட்டு கூப்பிடுறன்."

நானும் போனவேகத்தில் திரும்புகின்றேன்.

எவ்வளவுதான் இருந்தாலும் பெற்றமனம் கேட்கேல்ல.சிறிதுநேரத்தில் சமையலை முடித்துவிட்டு சாப்பாட்டைப் போட்டுக்கொண்டு என்னருகில் வந்துபார்த்தால், நான் எங்க படிச்சது புத்தகத்திற்குமேல தலையைவைச்சுக்கொண்டு படுத்திட்டன்.

அதிகாலையில் எழுந்து பனம்பழம் பொறுக்கியதும், பாணுக்கு பேக்கரியில் வரிசையில் நின்றதும்,பள்ளிக்கூடத்தால் வந்து கூப்பன்கடைக்குப்போனதும்,அதிகாலையில் எழுந்து நீர்இறைக்க வயலுக்குப் போவதும் இன்னும் என் மனக்கண்ணில் அப்படியே இருக்கிறது.

எண்ணஅலைகளிலிருந்து விலகி கடிகாரத்தைப் பார்க்கிறேன். நேரம்போனதே தெரியாமல் எனது சிந்தனை போய்விட்டதே என்று எண்ணியபடி மனதுள் ஏதோ இழந்துபோனதுமாதிரி .......

ஆனாலும் ஏதோ சிறுஅமைதி ஏற்பட்டவனாய் நான் தற்போது டென்மார்க்கில் வசிக்கும் அந்த அகதிமுகாமின் அறையைநோக்கி நடக்கிறேன். இங்கே எனக்கு குடையுமில்லை.ஆனால் தடியுமில்லை.

அவை எனக்கு வேண்டுபோலுள்ளது.

எப்படி? எப்போது?

முற்றும்.





படிப்பகம்

www.padippakam.com

புகைவண்டி அதி வேகமாக ஓடும்போதும் : நிலையாக நிற்கும் போதும் : வெளிப்புறக் காட்சிகளில் மாற்றமிருப்பதில்லை. எப்போதும் நிதானமான ஓட்டமே காட்சி மாற்றங்களைக் கண்களுக்குத் தரிசனமாக்கும். இன்றோ காலப் புகைவண்டி பெற்றுவிட்ட அசுர வேகம்: பெரிய பெரிய மாற்றங்களையே சீர்தூக்க முடியாதவாறு, நினைவுப் புலன்களைத் திகிலாட வைக்கிறது. கூர்ந்து பார்ப்போர் மட்டும் காலத்தின் வேகமென்பது, மனிதன் திறமைசாலியாகிவிட வேண்டுமென்பதில் காட்டும் அதி தீவிரத்தால் நிர்ணயமாகிக் கொண்டிருப்பதைக் காண்பர். காலக் கிழவன் கைத்தடி ஊன்றி, நிதானத்தோடு நடந்த அந்த நாள் தொடக்கம் இன்றுவரை: திறமைசாலிகளாகி விடத்தான் மனிதர்கள் இடித்துக் கொண்டு முந்துகிறார்கள். யார் எவ்வளவு வேகமாக ஓடினாலும் கவலை கொள்ளாது, உரியவர்களை மட்டுமே பூப்போலக் கொய்துவிடுகிறது திறமை. தூக்குவாரையும், வீழ்த்துவாரையும் விட்டுவிட்டு திறமையே தேடித் தெரிவு செய்து கொண்ட ஒரு விளையாட்டு வீரனைப்பற்றி . .

வரலாற்றுக்கு ஓர் கடிதம் : 05

## பல்துறை விளையாட்டு வீரன் :
# ஏ. வீ. அருணாசலம் !

கே. எஸ். துரை.

விளையாட்டு எல்லைக் கோடுகளுக்குள் நடப்பது. விதிகள் வகுக்கப்பட்டு, அதற்குள்ளாக ஆடப்படுவது. " மைதானத்தில் ஒருவன் எப்படி ஆடுகிறானோ ? அப்படியே நிஜவாழ்விலும் அவன் பிரசன்னமாகிறான் ! " — இது பழமொழி.

வாழ்க்கையை விளையாட்டாக்கி அழிந்து போனவர் பலர். ஆனால் விளையாட்டை வாழ்க்கையாக்கி வாழ்ந்து காட்டியவர் சிலர். அந்தச் சிலரில் ஒருவர் ஏ. வீ. அருணாசலம்.

ஒரு துறையில் ஒருவருக்குள்ள அதிக ஈடுபாடு அத்துறைமீதான மேலதிக ஆட்சியை ஏற்படுத்திவிடும் போதே; வேறு துறைசார்ந்த அஞ்ஞானத்தையும் அவருள் விதைத்து விடுவது இயல்பு. ஆனால் ஒரு துறையில் தான் உருவாக்கிக் கொண்ட மைய ஆற்றலை அதே பலத்துடன் மற்றத் துறைகளுக்குள் மாற்றிப் போடுவதன் மூலம் சகல துறைகளிலும் உயர் ஆட்சி செலுத்தும்போதே மனிதன் பல்துறை விற்பனனாகிறான்.

இப்படியொரு நுண்பாக வாழ்வியல் சமநிலையை ஏ. வீ. அருணாசலத்திடம் சுமார் 25 வருடங்களுக்கு முன்பே அவதானித் திருந்தேன். கரப்பந்தாட்டமா ? உதை பந்தாட்டமா ? மெய்வல்லுனர் போட்டிகளா ? கரம், டாம், சதுரங்கம், கிரிக்கட், பூப்பந்தாட்டம் என்று ஏக காலத்தில் எல்லா விளையாட்டுத் துறை களிலும் வெற்றி வீரனாக வலம்வந்த ஒரே முகம்.

மேலே நிரல் படுத்தியவை யாவும் விளையாட்டுத் துறைகள்தாம். தான்



படிப்பகம்

www.padippakam.com

கையகப்படுத்திய ஆற்றலை வேறோர் இடத்திற்கு மாற்றியமைத்துப் பின்நாளில் "பான்சிபலஸ்" ஒன்றை ஆரம்பித்துக் காட்டினார். ஒருவர் மூன்று வாடிக்கையாளரைச் சேர்த்துப் பரிசுபெற : சேர்ந்த மூவரும் மேலும் மூவர் மூவராகச் சேர்த்து, தொடர்ந்து பணச்சுழர்ச்சியை விரிவடையச் செய்யும் முறை. பணம் பெட்டி பெட்டியாகப் புரண்டது. விளையாட்டின் வெற்றியை வாழ்க்கைக்குள் நகர்த்தி முன்னேறும் கலை அங்கு விளையாடியது.

சொற்ப நாட்களில் இந்த அலை மாறி வேறோர் அலை வீசியது. சமூக மாற்றத்தை அவதானித்து இந்தியச் சுற்றுப்பயணக் கழகத்தை ஆரம்பித்தார். காசிமுதல் கன்னியாகுமரி வரை யாத்திரீகர் புடைசூழ இந்தியாவைச் சுற்றிச் சுற்றி வலம்வந்தார். என்றோ சுய பொருளாதாரத்தில் ஏற்றிய கொடியை இதன் மூலம் மேலும் ஒருபடி உயரப் பறக்கவிட்டார்.

காலம் எப்படி மாறினாலும் : சூழ்நிலைகள் எவ்வாறு உருவெடுத்தாலும்: வல்லவனுக்கு அவை முக்கியமல்ல: எந்த நெருக்கடியிலும் உழைப்பால் உயர்வுபெறும் வாழ்வியல் கலையில் துறைபோன இந்த விளையாட்டு வீரருடன் எனக்குப் பழக்கமேற்பட்டது 1970 இல்.

அப்போது யாழ் . மாவட்டப் பாடசாலைகளுக்கிடையேயான சர்வதேச முறையிலான கரப்பந்தாட்டச் சுற்றுப் போட்டி. அந்த ஆண்டு எமது பாடசாலையும் , சிங்களமகா வித்தியாலயமும் இறுதிப் போட்டியில் மோதின. அந்த அணியில் நானும் இடம்பெற்றிருந்தமையால் எமது மூத்த தலைமுறை வீரரான அருணாசலத்துடன் நெருங்கிப் பழக வாய்ப்புண்டானது.

கரப் பந்தாட்டத்தில் எமது பாடசாலையின் அணியொன்று 1951 ம் ஆண்டில் அகில இலங்கைச் சாம்பியன் ஆனதையும், கம்பகா அணியை தென்னிலங்கையில் வைத்தே வெற்றிவாகை சூடியதையும் அப்போது நினைவுபடுத்தினார். வெற்றியோடு மட்டுமல்ல: சொந்த உயிர்களோடும் திரும்பி வருவதற்கு அன்று அந்த அணியினர் பட்டிருந்த சிரமங்களையும் எடுத்துக் கூறினார். ஆயினும் அந்த அனுபவத்திற்குப் பின்னர் அப்படியொரு வெற்றி இதுவரை வந்து வாய்க்கவில்லை. எனவே அதை நோக்கி நாம் மேலும் முயற்சிக்க வேண்டுமெனவும் எமக்கு உற்சாகம் தந்தார்.

கம்பகா அணியைப் பற்றிப் பேசும்போது அருணாசலத்தையும் கூடவே நினைக்காமலிருக்க முடியவில்லை. யாரிடமும் இல்லாத ஏவுகணைபோல ஒரு சேவீஸ் கம்பகா அணியிடம் இருந்தது. சேவீஸ் பந்தை வான்நோக்கி அடித்தால் அது இரண்டு பனைகளின் உயரத்திற்கு எழும்பி, கனவேகத்தில் கீழ்நோக்கிப் பாயும். எதிரணியினர் திகைத்துச் சிதறுவர்.

இந்த வித்தையை மேலும் கூர்மைப் படுத்தி , புதிய பரிமாணத்துடன் அறிமுகமாக்கினார் அருணாசலம். மின்னொளியில் நடாத்தப்படும் லாலா சோப் ஆட்டங்களில் இவர் அடித்த பந்துகள் வான்நோக்கி உயர்ந்து, இருளில் மறைந்து, திடீரென மைதானத்தில், "பொத் ! பொத் ! " தென விழுந்து, கம்பகாவிடம் பயிற்சிபெற்ற இராணுவத்தினரையே திக்குமுக்காட வைத்ததையும் பார்த்திருக்கிறேன்.

இப்படி தமிழரின் அணிகளிடம் தோல்விகள் நெருங்கும் போது மாற்றுவழி தெரியாத இராணுவத்தினரும், பொலீசாரும் துப்பாக்கிப் பிரயோகம் செய்து குழப்புவதை விளையாட்டாக்கினர். சிங்கள மகா வித்தியாலயத்துடன் நமது பாடசாலை அணி மோதியபோதும் சிங்களப் படையினர்



படிப்பகம்

www.padippakam.com

இவ்விதமான காரியங்களில் இறங்கியதை நேரடியாகக் கண்டேன்.

இனி ஓவர் கேம் ஆட்டம் —

அக்காலத்தில் ஓவர்கேம் ஆட்டத்தில் யாரும் இலகுவில் வெற்றிபெற முடியாத இருபெரும் அணிகள் இருந்தன. ஒன்று அல்வாய் யூனியன் மற்றது இமையாணன். முதலாவது அணியை வழிநடத்தியவர் தியாகராஜா மாஸ்டர். அடுத்த அணியின் முதன்மை வீரர் அப்புக்குட்டி.

மின்னலடிவீரன் விஜயன், தோம்பன் சின்னக்கிளி, சின்னத்துரை போன்ற வீரர்களுக்கு அடுத்து பெருவீரர்களாகத் தெரிந்த இருவர் அப்புக்குட்டியும், அல்வாய் தியாகராஜா மாஸ்டருமே.

ஐந்நூறு பந்துகள் வந்தாலும் ஒரு பிழையுமின்றி, வலம் இடமென தியாகராஜா மாஸ்டர் ஆடும் அலங்காரமிருக்கிறதே அது அக்காலத்தில் தமிழீழம் எங்குமே பிரசித்தமானது. நூறு பந்துகள் வந்தாலும் அத்தனையையும் விளாசித்தள்ளும் திறமை கொண்டவர் அப்புக்குட்டி. இவர்கள் இருவரும் மைதானத்தில் நின்றால் போதும் பார்வையாளர் பகுதி பெண்களால் நிறையும்.

1974ல் ஒருநாள் திக்கத்தில் அல்வாய் யூனியனை எதிர்த்து விளையாடிய புளூஸ் கழகம் அருணாசலத்தை களத்தில் இறக்கியிருந்தது. பார்த்தவர் எவரும் நினைவுள்ளவரை மறக்கமுடியாத ஆட்டம் அது.

அருணாசலத்தின் கையிலிருந்து பந்து "பட்!" டென்ற தூயஓசைடன் வானத்தில் எகிறிப் பறக்கும். அது உண்மையில் அவுட்டாகும் பந்தென்றே எதிரணியினர் கருதுவர். ஆனால் பந்தோ திடீரென சுழர்ச்சியெடுத்து எல்லைக் கோட்டின்மீது ஈட்டியாய்ப் பாயும். கையில் உருளும் பந்துகள் கரைக் கோடுகளைத் தேடித்தேடி முத்தமிட்டன. இறுதிப் பந்து வான்வழி வந்தபோது எதிரணியினர் முற்றாக நம்பிக்கையிழந்து விட்டனர். தொடுவாரின்றி பந்து நடு மைதானத்தில் இரும்புக் குண்டாய் விழுந்தது. அல்வாய் முதல் தடவையாகத் தோல்வியைத் தழுவியதைக் கண்டேன். அந்த நுண்கலை வெற்றிக்குள் இன்றும் அருணாசலத்தின் முகத்தையே காண்கிறேன்.

"காலடியில் சேரும்பந்து என்னுடையதல்ல ; என் குழுவினரது!" என்று கணித்து, விளையாட்டுத் துறையில் இவர் குவித்த வெற்றிகளுக்கெல்லாம் ஒருநாள் வெள்ளிவிழா வந்தது. "அதைத் தவறாது கொண்டாடி அவரைச் சிறப்பிக்க வேண்டும். மற்றவர் திறமையை மதிக்க வேண்டியது நம் கடனல்லவா ?" என்றவாறு சிலர் முன்வந்தனர்.

காதில் பட்டதுதான் தாமதம் சமூகம் விழித்துக் கொண்டது." இவரைத் தெரியாதா..?" என்றவாறு, விளையாட்டு மைதானத்துள் கனவிலும் இறங்கியிராதவர்களும் கருத்துக் களை உருவியபடி, பாய்ந்து வந்தார்கள். எதிர்ப்பு அகோரமாயிருந்தது. சமுதாயம் தன் நிஜ முகத்தை போர்வை கழற்றிக் காட்டியது.

அன்றே தடைப்பட்டுப் போன அந்தக் கௌரவிப்புப்பற்றி அவருடன் பேசும் வாய்ப்பு நீண்ட நாட்களுக்குப் பின்பே கிடைத்தது.

அப்போது திருமலை சைனிங்ஸ்ரார்ஸ் விளை யாட்டுக் கழகம் நடாத்தும் நான்கு பேர் கொண்ட கரபந்தாட்டச் சுற்றுப் போட்டியை ஓர் மாபெரும் போட்டியென்றே வர்ணிப்பர். காரணம் இலங்கையின் சகல மாவட்டங்களின் முக்கிய அணிகளும் சந்திக்கும் ஒரே ஒரு போட்டி அது.



படிப்பகம்

www.padippakam.com

1976 இல் அல்வாய் தியாகராஜா மாஸ்டரின் அணி எதிரொலி விளையாட்டுக் கழகம் என்ற பெயரில் விளையாடி வெற்றியீட்டியது. அந்தப் போட்டியைக் குறிவைத்து நாமும் ஒரு ஆண்டுகாலம் கடும் பயிற்சியெடுத்தோம். அத்தருணமே அருணாசலத்தின் எல்லைக் கோட்டு அடியையும் விஷேட கவனமெடுத்துப் பழகிக் கொண்டோம். 1977 இல் பலத்த மோதலுக்குப் பின் அந்த வெற்றிக் கிண்ணத்தை எமது அணி சுவீகரித்தது.

தேடிவந்து பாராட்டினார் அருணாசலம். " மற்றவரைத் தானாகச்சென்று பாராட்டும் உங்களை அன்று ஏன் சமூகம் பாராட்டத்தயங்கியது ? " என்று கேட்கும் வாய்ப்பும் அந்நேரம் கனிந்தது.

" போற்றுவதற்கும் தூற்றுவதற்கும் வருத்தப்பட தேனீக்களுக்கு ஏது நேரம்? நாய்கள் குரைக்கும்போதெல்லாம் தாமதிப்பவன் செல்ல வேண்டிய இடத்திற்குச் செல்ல முடியாது! இனி பொன்விழாவில் பார்த்துக் கொள்ளலாம் ! " என்றார். ஐம்பதாவது ஆண்டை அவர் சந்தித்தாரா ? நான்கு வருடங்களுக்கு முன் ஒருநாள் —

பொன்விழாவைக் காணமுன்பே விதி சென்னைச் சாலையில் வைத்து அவரை வழி மறித்தது.விதிகள் வரையப்பட்ட மைதானத் திற்குள் வெற்றிக் கொடி நாட்டிய இந்த வீரர் வீதி விதிகள் செத்துப் போன சென்னைச் சாலையில் ஆட்டமிழக்க நேர்ந்தது.

ஜனத்தால் அடர்ந்த சென்னை வீதியில் வேதாளம் குதித்தது போல பாய்ந்துவந்த பேருந்து வண்டியொன்று அருணாசலத்தின் ஸ்கூட்டர் வண்டியின் மீது பாய்ந்தது. அவ்வளவுதான்: விதி தனது பேனாமுனையை நடு றோட்டில் முறித்து, அவரின் வாழ்விற்கு முற்றுப் புள்ளியிட்டது. அப்போதுதான் ஒருவரின் திறமையை அவர் வாழும் காலத்திலேயே பாராட்ட நாமும் தயங்கிவிட்டோமே ? என்று ஆத்மம் பதை பதைத்தது.

"பழம் பெருமை பேசும் சமூகம் நம்மிடையே வாழ்ந்து கொண்டிருக்கும் திறமை மிக்கோரை வாழும் காலத்திலேயே ஏன் கௌரவிக்கத் தயங்குகிறது ? " கண்களுக்குள் முள்ளாய்த் தைத்தது இக்கேள்வி

அகில இலங்கை ரீதியாக புகழ் பெற்றிருக்க வேண்டிய இவர் போன்ற எண்ணற்ற வீரர்கள் நம்மிடையே பிறந்து, எந்தச் சிறப்பும் பெறாது மறைந்தே போனார்களே ? என்பதை நினைக்கும் போதெல்லாம் சோகம் என்மீது மின்னலாய்ச் சாடும்.

இனரீதியாக, மொழி ரீதியாக மட்டுமல்ல: விளையாட்டு ரீதியாகவும் நமது இனத்தைப் பரிதாபத்திற்குரிய வகையில் நசுக்கியிருக்கிறார்கள் சிங்களப் பேரினவாதிகள்.

இதை நாம் சரியாக அடையாளங் காணவில்லை. உலகப் புகழ் பெற்றிருக்க வேண்டிய எத்தனையோ ஈழத் தமிழ் முகங்கள் ஆட்சியாளரின் இருட்டடிப்பால் அடையாளமின்றி மறைந்து போயினவே ..?

பேரினவாதிகளை விடுங்கள். குறைந்த பட்சமாக, " பீன்ற் ! " என்றே எதெற்கெடுத்தாலும் பாராட்டும் டெனிஸ் மக்களைப் பார்த்தாவது நாமும் நம்மினத்து வீரர்களை மதிக்கப் பழகிக்கொள்ள வேண்டாமா ? என்று இதயம் கேள்விமேல் கேள்வி கேட்டது.

ஆம் ! அருணாசலம் போன்றோர் இறந்திருக்கலாம் : ஆனால் இக்கேள்வி மட்டும் சாகா வரம்பெற்றிருக்கக் காண்கிறேன்.

(மேலும் வரும் )



படிப்பகம்

www.padippakam.com

**H.C.Andersenகதை**

**தமிழில்........................................ விழி**

# கடற்கன்னி

H.C.Andersen அவர்களின் கதைகளில் இந்தக் "கடற்கன்னி" என்கின்ற கதை மிகவும் பிரபல்யம் வாய்ந்த ஒன்றாகும். இக்கதை மிகவும் நீண்டதொரு கதை என்பதனால் 96 தை இதழிலிருந்து பாகம் பாகமாக காகத்தில் வெளிவரும்.
இக்கதையில் வரும் கதாநாயகியின் உருவச்சிலை டென்மார்க்கின் உல்லாசப்பிரயாணிகளைக் கவரும் வரலாற்றுச் சின்னமாக கொப்பனேகனில் அமைந்துள்ளதும் குறிப்பிடத்தக்கது.



2

கடற்கன்னியின் வயதான பாட்டியே அவளுக்கு கப்பல்,நகரங்கள்,மனிதர்கள்,மிருகங்கள் போன்ற அனைத்து விடையங்களையும் தெரியப்படுத்தினாள். இவ்விடையங்கள் யாவும் அந்த இளைய பெண்ணுக்கு அழகானவையாகவும் வியப்பைத் தரக்கூடியனவாகவும் இருந்தன.

பூமியின்மேலிருந்த மலர்களோ நறுமணத்துடன் இருந்தன. ஆனால் கடலின் அடித்தளத்தில் இருந்த மலர்களுக்கோ அத்தன்மை இருக்கவில்லை.
பூமியில் காடுகள் கரும் பச்சையாக இருந்தன. காட்டின் கிளைகளினிடையே காணப்பட்ட மீன்களினால் இனிமையாகவும் உரத்தகுரலிலும் பாடமுடிந்தது. சந்தோசமிகுதியினாலேயே அவை இவ்வாறு செய்தன. உண்மையில் அங்கு பாடியவை மீன்களல்ல. பறவைகள்தான்.
அந்தக் கடல் இளவரசிகள் பறவைகளை ஒருபோதும் காணாததினால் பாட்டி



படிப்பகம்

www.padippakam.com

தான்சொல்வதை அவர்கள் விளங்கிக்கொள்ள வேண்டும் என்பதற்காகவே பறவைகளை மீன்கள் என்று விபரித்திருந்தாள்.

" எப்போது உங்களுக்கு 15 வயதாகிறதோ அப்போது நீங்கள் கடலின் மேற்பரப்புக்குச் சென்று அங்குள்ள பாறைகளில் அமர்ந்து உங் களைக்கடந்து செல்லும் கப்பல்களையும் நகரங்கள் காடுகளையும் காணலாம்" என்று பாட்டி மேலும் கூறினாள்.

அந்த வருடத்தில் அச்சகோதரிகளில் ஒருத்திக்கு 15 வயதாகப்போகின்றது. ஒருவள் மற்றவளிலிருந்து ஒருவயது இளமையானவளாக இருந்தாள். அப்படியாயின் அவர்களின் இளையசகோதரி கடலின் மேற்பரப்புக்குவந்து வெளியுலகைப் பார்ப்பதற்கு இன்னும் 5 வருடங்கள் இருந்தன. ஆனால் அவர்கள் ஒவ்வொருவரும் தாங்கள் வெளியுலகைக் காணும்போது அங்கே எவற்றைப் பார்த்தோம், எவற்றைக் கண்டுபிடித்தோம் என்றவிபரத்தை ஒருவருடன் ஒருவர் பகிர்ந்துகொள்வோம் என்று தங்களுக்குள் வாக்குறுதி எடுத்துக் கொண்டனர். பாட்டி அவர்களுக்கு விபரித்தது கொஞ்சம்தான். ஆனால் அங்கே தெரிந்துகொள்வதற்கு நிறையவே உண்டு என்று அவர்கள் நினைத்துக் கொண்டனர்.

மற்றவர்கள் எவருக்குமில்லாத ஏக்கம் அந்த இளைய சகோதரிக்கு ஏற்பட்டது. அவள் பூமியின்மேற்பரப்பைச் சென்றுபார்க்கும் அந்த நாளுக்காக நீண்டநாட்கள் காத்திருக்கவேண்டும். அதிக இரவுகள் அவள் திறந்திருக்கும் ஜன்னல் வழியே இருண்ட நீலக்கடல்நீரையே ஊடுருவிப்பார்த்தவண்ணம் இருப்பாள். அங்கே மீன்கள் தங்கள் வாலினால் நீரைஅடித்து விளையாடிக்கொண்டிருக்கும்.

சந்திரனும் நட்சத்திரங்களும் தங்களுக்கே உரிய தன்மையுடன் ஒளிவீசிக்கொண்டிருந்தாலும் அவை ஒளியிழந்து காணப்படுவனபோல அவளுக்குத் தோன்றும். அவற்றை நீரினூடாகப்பார்க்கும்போது நேரில் பார்ப்பதைவிட மிகப்பெரியதோற்றத்துடன் காட்சியளிக்கும். நீரினூடாக அவற்றின் ஒளியில் சிறிய இருட்டுப் போன்றசலனம் ஏற்பட்டபோதெல்லாம் அந்த ஒளியைத்தாண்டி ஒருதிமிங்கலம் போவதாகவோ அல்லது கடலின் மேற்பரப்பில்,ஒருகப்பல் நிறையமனிதர்கள் போவதாகவோ நினைத்துக் கொள்வாள்.

கடலின் கீழ்ப்பரப்பில் ஒரு அழகிய கடற்கன்னி அண்ணார்ந்து பார்த்தபடி ஏங்கிநிற்பதை அந்த கப்பலில் இருக்கும் மனிதர்கள் எவருமே அறிந்திருக்கமாட்டார்கள்.

இளவரசிகளில் மூத்தவளுக்கு 15 வயதாகும் நாளும் வந்தது.அவள் கடலின் ஆழ்ப்பரப்பிலிருந்து மேற்தளத்திற்கு வந்து வெளியுலகைப் பர்ப்பதற்கு ஆயத்தமானாள்.

அவள் தனது பயணத்தை முடித்துக்கொண்டு திரும்பிவந்தபோது மற்றவர்களுக்கு விபரிப்பதற்கு அவளிடம் நூற்றுக்கணக்கான விடையங்கள் இருந்தன. ஆனால் அவற்றிலெல்லாம் மிகச்சிறந்ததாக ஒன்றைக்கருதி அதனை விபரித்தாள்.

ஒரு அமைதியான ஆற்றங்கரை மணற்பரப்பு சந்திரஒளியால் நிறைந்திருந்தது.அதன்கரையோரத்தை அடுத்து ஒரு பெரிய நகரம் இருந்தது. அங்கே நூற்றுக்கணக்கான நட்சத்திரங்கள் பிரகாசிப்பதைப்போன்று ஒளிபிரகாசித்தது. சங்கீதஒலியும் வாகனங்களினதும், மனிதர்களினதும் உரத்தசப்தமும் அங்கு நிறைந்திருந்தன. ஆலயக்கோபுரங்களிலிருந்து மணி ஒலித்தது. ஆனால் இவை எல்லாம் அந்த மூத்த இளவரசி இருந்த இடத்திற்கு மிக நீண்ட தூரத்தில் நடந்தபடியால் அவளால் அவ்விடங்களுக்குப் போகமுடியவில்லை.

இவற்றையெல்லாம் கேட்டநாளிலிருந்து இரவு



படிப்பகம்

www.padippakam.com

வேளைகளில் திறந்த ஜன்னல் வழியே இருண்ட நீலக்கடலை பார்த்துக்கொண்டிருக்கும் போதெல்லாம் அந்த சிறிய இளவரசி சப்தம் மிகுந்த அந்தப் பெரிய நகரத்தையே நினைத்துக்கொண்டிருந்தாள்.
ஆலயமணியின் சப்தத்தையும் அவனால் கேட்கக்கூடியதாக இருப்பதாகக் கருதினாள்.

அடுத்தவருடம் இரண்டாவது இளவரசிக்கு நீரின்மேற்தளத்துக்கு வரவும் அவள் விரும்பும் இடமெலாலாம் நீந்திச்செல்லவும் அனுமதி கிடைத்தது. சூரியஅஸ்த்தமனப் பொழுதிலேயே அவள் நீருக்குவெளியே வந்தாள். அத்தகையதொருபொழுதே உலகத்தைப் பர்ப்பதற்கு சிறந்த காலமென அவ்விளவரசி கருதினாள்.

வானம் தங்கத்தைப்போல பிரகாசித்தது. முகில்களையும் அவற்றின் அழகையும் அவளால் விபரிக்கமுடியவில்லை. சிவப்பிலும் ஊதாநிறத்திலுமான முகில்கள் பறப்பதைவிடவும் மிகவேகத்துடன் வெள்ளையான பனிமூட்டத்துடனும் அவளைக்கடந்து சென்றன. சூரியன் எங்கே அஸ்த்தமனமாகிக்கொண்டிருந்தானோ அதற்குமுன்னதாக ஒருகூட்டம் பறவைகள் நீரில் விளையாடிக்கொண்டிருந்தன. அவள் சூரியனைநோக்கி நீந்தத்தொடங்கினாள். ஆனால் முகில்களிலும் கடலின் மேற்பரப்பிலும் ரோஜா நிறத்தைப் பரப்பியவாறு சூரியன் மறைந்துவிட்டான்.

அடுத்தவருடத்தில் மூன்றாவது இளவரசியின் முறைவந்தது. அவளே அவர்களில் மிகவும் துணிவும் தைரியமும் உள்ளவளாக இருந்தாள். அதனாலேயே அவள் ஒரு அகன்ற நதிஒன்று கடலோடு சங்கமிக்கும் இடத்தில் நீரின்மேற்பரப்புக்கு வந்தாள். அழகிய பசுமையான திராட்சைக் கொடிகள் அங்கு உயர்ந்து வளர்ந்திருந்தன. கோட்டைகளும் பண்ணைகளும் காடுகளுக்கிடையே காணப்பட்டன.
பறவைகளின் பாட்டை அவளால் கேட்கமுடிந்தது. சூரியன் மிகவெப்பத்துடன் பிரகாசித்ததனால் அவள் அடிக்கடி நீருக்கடியில் போய் தனது சூடேறிப்போயிருந்த முகத்தை குளிராக்கிக் கொண்டாள்.
ஒருகுடாவொன்றில் மனிதக்குழந்தைகள் பலர் நிர்வாணமாக விளையாடிக் கொண்டிருந்ததைக் கண்டாள். அவளுக்கு அவர்களுடன் விளையாடுவதற்கு ஆசையாக இருந்தது. ஆனால் அவர்களோ திகைப்படைந்தவர்களாக தங்கள்வழியில் சென்றுவிட்டார்கள். அங்கே ஒரு சிறிய கறுப்புமிருகம் வந்தது-அது வேறுஎதுவுமல்ல; ஒரு நாய்தான்.
அவள் இதற்குமுன்னர் ஒருபோதும் நாயைக் கண்டதில்லை. அவளைக்கண்டதும் அந்த நாய் குரைக்கத் தொடங்கியது.அவளும் மிகப்பயந்து அத்துடன் அந்த நதியைவிட்டு விலகி கடலுக்கடியில் வந்துவிட்டாள்.
அந்த பசுமையான காடுகளையும், அழகான குழந்தைகளையும் அவளால் ஒருபோதும் மறக்கமுடியவில்லை.

......................அடுத்தஇதழிலும் தொடரும்......................

.............................................................................

......................11 ம் பக்கத் தொடர்ச்சி......................

*முற்றிலும் புதிதான சூழ்நிலையில் இப் பொங்கலைச் சந்தித்தாலும்: பொங்கல் பண்டிகையில் எல்லோரும் ஒன்றுபடுவது போல, எதிரிக்கு எதிராக தமிழினம் ஒருமித்த குரலில் பொங்கியெழும் வரலாற்றுப் புகழ்மிக்க காலத்தில் இப் பொங்கல் பொங்கி வழிகிறது. எனவேதான் பட்ட துயரங்களுக்கும் இனிவரும் வெற்றியின் அறுவடைக்கும் இடையில் ஒரு மையப்புள்ளியாகவும் இப் பொங்கலை ஈழத்தமிழினம் எதிர்கொள்ளக் காண்கிறோம்.*



படிப்பகம்

www.padippakam.com

செய்திக்கட்டுரை..............................................................

# எரியும் பிரச்சனை

**மேற்குலகில் இறுகிவரும் வெளிநாட்டவர் பிரச்சனை.........**



## தமிழர்களுக்கும் இது பொருந்துமா?

அண்மையில் டென்மார்க்கில் பரவலாகப் பேசப்பட்டும், பல செய்தித்தொடர்பு சாதனங்களின் கவனிப்புக்கும் உள்ளானதாகஒரு நிகழ்ச்சி நடந்து முடிந்துவிட்டது.ஒரு பாகிஸ்தானிய இளைஞன் ஒருவன் இன்னொரு பாகிஸ்தானிய இளைஞரால் சுட்டுக்கொல்லப்பட்ட சம்பவமே அதுவாகும்.

இதன்பின்னணியில் அதற்கான காரணங்கள் பல பேசப்பட்டாலும்....

இந்த இரத்தம்சிந்திய நிகழ்ச்சியின் பின்னர் டென்மார்க்கில் பாகிஸ்தானிய மக்களின் முன்னேற்றத்துக்காக உழைத்துவரும் திருமதி. LUBNA.ELAHI என்னும் ஒரு அரசியல்வாதியும், BASHY.QURAISHY என்னும் சமூக அக்கறையாளரும் டனிஸ் பத்திரிகைகளில் அளித்த கருத்துக்கள் நமது தமிழ் புலம்பெயர் சமூகத்தின் இரண்டாவது பரம்பரையினர் தொடர்பான பிரச்சனைகளுக்கு பெருமளவு பொருத்தமுள்ளதாகவுள்ளது.

சில காலங்களுக்குமுன்பு செய்யப்பட்ட ஆய்வு ஒன்றின் முடிவின்படி; "பாகிஸ்தானிய இரண்டாவது சந்ததியினர் டனிஸ் சமபராயத்தினருடன் ஒப்பீடுசெய்யும்போது பாகிஸ்தானிய இளைஞர்கள் வன்முறையில் நாட்டமுள்ளவர்களாக இருக்கின்றார்கள்" என அறியப்பட்டது.

இவ்வகையான வன்முறைகளுக்கான காரணங்கள் என்ன ? என ஆராயப்பட்டபோது கட்டுரையில் மேலே குறிப்பிடப்பட்ட இருவரும் பின்வருமாறு கருத்துத்தெரிவிக்கின்றனர்.

" இந்த இரத்தம் சிந்தும் நிகழ்வானது டென்மார்க்கில் பாகிஸ்தானியர்களை அதிர்ச்சிக்குள்ளாக்கியுள்ளதுடன்;முன்னரைவிட இது பயங்கரமாக வளர்ந்துவிட்டது.ஆகவே இது மிகப்பயங்கரமாவதற்கு முன்னதாக தகுந்த நடவடிக்கை எடுக்கப்படல்வேண்டும்."

"குழந்தைகளின் இந்தப் பயங்கரவாத நடவடிக்கைகளுக்கு எதிராக குழந்தைகளுக்கு பொறுப்பாக இருக்கும் பெற்றோர்களே பொறுப்புடன் நடந்து கண்காணிக்கவேண்டும்."

"உள்ளூர் அரசியல்வாதிகளைப்போல் – இது பயங்கரவாதம். – வன்முறை – கொலை – என்று உதறித்தள்ளிவிடாமல் இந்த இளைஞர்களின் பிரச்சனையில் பெற்றோர்கள் அக்கறைகொள்ள வேண்டும்."

இன்றும் நாம் இந்தப் பிரச்சனையில் உதாசீனமாக இருப்போமானால் இன்னும் 10 வருடங்களில் இன்னும் பல பிரச்சனைகளை நாம் சந்திப்போம்."

**நாம் எல்லோருமே பிரிந்திருந்தோம். இந்த இரத்தக்களரியின் பின்னராவது நாம் ஒன்றிணைந்து இப் பிரச்சனையை தீர்க்க ஒன்றுபட்டுள்ளோம். இதுகூட 15 வருடங்கள் பிந்தியே நடந்திருக்கிறது"**

......................தொடர்ச்சி 23 ம் பக்கம் பார்க்க..........



படிப்பகம்

www.padippakam.com



காகம் இதழ் 11 ல் வெளியான "பொருத்திக் காண்பதென்ன" இல. யாவ -4 ற்கான போட்டியில் கலந்துகொண்ட போட்டியாளர்களுக்கு காகத்தின் நன்றிகள்.
எல்லோருமே நல்ல விளக்கங்களை எழுதியிருந் தார்கள்.மகிழ்ச்சி.
இந்தமுறை தெரிவான வாசகர்:
செல்வி. ராஜசேகரம் சுரந்தினி ( வயது 14 )

அவர் எழுதி அனுப்பிய படவிளக்கம்

..................................................................................

தேர்திருவிழா
இக்காட்சி இந்துக்களின் மதத்தில் முக்கிய இடம்பெறும் ஒருதிருவிழா.
உலாவிற்கென ிறப்பிக்கப்படும் தெய்வத்தை இங்கு தேரில் காணலாம்.
பூசைக்குரிய ஐயரும் இங்கு பிரதிபலிக்கிறார்.
இத்திருவிழா வருடத்தில் ஒருமுறை நடைபெறும். கொடிஏற்றிஅதற்குரிய நாட்பூசைசெய்து தேர்த்திருவிழாவன்று தேரில் சுவாமியை வைத்து தேரில் உலாவருவார்கள்.
இது சுற்றிவருவதால் கோவிலுக்குள் செல்லமுடியாதவர்களும் ;சுவாமியை காணக்கூடியதான முறையிலும் இத்திருவிழா கொண்டாடப்படுகின்றது.

.................செல்வி. ராஜசேகரம் சுரந்தினி....றனாஸ்

(இந்த ...ில் ... தவிர்க்கமுடியாமல் "பொருத்திக்கா... தன்ன" போட்டி இடம்பெறவில்லை. அடுத்த இதழில் ...ம்.)



காகம்

முற்றமெல்லாம் புழுங்கல் - அதனால்
எம் நெஞ்சமெல்லாம் அம்முற்றம்.
-
ஒரு தாய்

"இது ஒரு தமிழ் மாசிகை"
ஏடு இல: 2- மாசி - 96
வெளியீடு: ரூலி பப்ளிக்கேசன்
Baunehøjen 35
3320 Skævinge
Denmark
Tlf: 42 28 90 12
விலை: ஒரு வருடம்
( 12 இதழ்கள் )-200
டனிஸ்குரோன்கள்
வெளிநாடுகள்: 50 Us
கட்டணம் செலுத்தவேண்டிய
வங்கி:
Tuli Publikation
Den Danske Bank
Hillerød Afdeling, Slotsgade 16- 18
Postboks 255
3400 Hillerød Denmark
A/C NO : 35 43 - 38 69 87
அல்லது
Post Giro : 94 78 65 3

ஆசிரியர்: முல்லையூரான்
படைப்பாளிகள்தொடர்பு: திரு.ரவி .TlF: 86 40 38 05
வாசகர்கள் தொடர்பு: திரு.செல்வன் TlF:86 64 51 98
வடிவமைப்பு: ரூலிபதிப்பகம், ரவி
அட்டைப்படம் : ஓவியர் திரு. பாலா.

சஞ்சிகையில் ...டம்பெறும் ஆக்கங்களுக்கு படைப்பாளிகளே முழுப்பொறுப்பாளிகளாவர். காகத்தின் எண்ணங்களை படைப்பாளிகள் பிர... க்கவேண்டுமென்றில்லை.
......காகம்......

www.padippakam.com

21 ம் பக்கத் தொடர்ச்சி.........................................

"1950 களில் தொளிலாளர்களாக டென்மார்க்கிற்கு இடம்பெயர்ந்த பாகிஸ்தானியர்களின் 2வது பரம்பரையானது ஒருவகையில் டனிஸ்காரர் போலவும்,அதேவேளை பாகிஸ்தானியராகவும் தம்மை வெளிக்காட்டிக்கொள்கின்றார்கள். அதேவேளை வன்முறையிலும் ஈடுபாடு காட்டுகின்றார்கள்."

"இப்பிரச்சனையை தீர்ப்பதில் டனிஸ் அரசநிர்வாகத்தைவிட நாமே தீர்த்துக்கொள்வதே இலகுவான ஒரு முறையாகும்." என்று பாகிஸ்தானிய குழுவினர் கூறிக்கொள்ளும் இக்கருத்தை டனிஸ் பொலிஸ்துறையினரும் கூறியுள்ளனர்.

"இந்தப்பிரச்சனையின் அடிஅத்திவாரம் எங்குள்ளது என்பதைக்கண்டறிவதில் சிக்கல்கள் பலவுள்ளன.

ஆனாலும்.......

பாகிஸ்தானியரின் சமூகத்தில்:

1.யார் பெரிது என்னும் போட்டி மனப்பான்மை பெரிதும் காணப்படும் ஒரு விடையமாகும்.இது பாகிஸ்தானிலிருந்து தொற்றிவந்து இன்றும் இங்கும் கடைப்பிடிக்கப் பட்டுவரும் ஒரு ஞாபகச்சின்னமாகும்.

2. பாகிஸ்தான் கிராமங்களில் ஒருசிலரே அக்கிராமத்தை ஆள்பவராக அதிகாரமுள்ளவராக காணப்படுவர்.அத்தகைய போட்டி இங்கும் வேர்விடுகின்றது.

3.இக்குழப்பங்களுக்கெல்லாம் அடித்தளமாக பாகிஸ்தானிலுள்ள தமது குடும்பத்தவரை முன்னேற்றுவதிலும் அதற்காக பணம்சேர்த்தலில் ஈடுபடுவதனையும் நாம் கவனத்தில் கொண்டு பார்க்கவேண்டும்.

4. டென்மார்க்கில் வாழும் பாகிஸ்தானிய குடும்பங்களில் இந்த இரண்டாவது சந்ததியினரே அதிக அதிகாரமுள்ளவர்களாக திகழ்கின்றார்கள்.

5."இத்தகைய நிலையில் பலவருடங்களாக டெனிஸ் சமூகத்தினுள் அடைக்கப்பட்டு அவிந்து வாழும் பெற்றோர்களிடையே இந்த இரண்டாவது சந்ததிபற்றிய நம்பிக்கை மிகச்சிறி தளவாகவே காணப்படுகின்றது".

6."இந்துசமயத்திலுள்ள சாதியமுறைமை தொழில் அடிப்படையானது. அதேபோல் பாகிஸ்தானிய சமூகத்திலும் அதன் தொற்றலாக சில பிரிவுகளுள்ளன.

7.டென்மார்க்கில் தொழில்நிமித்தம் 1950 களில் குடிபெயர்ந்த இந்த சமூகத்தினரில் பெரும்பான்மையோர் பாகிஸ்தானிலுள்ள "MANDIR" எனப்படும் கிராமத்திலிருந்து வந்தவர்களாவர். "இவர்களின் சமூகமுரண்பாடுகள் டென்மார்க்கிலும் பெரிதும் இன்றும் பின்பற்றப்பட்டுவருவதும் இச்சிக்கலுக்கான காரணங்களில் ஒன்றாகும்."

8. இப்பிரச்சனை தொடர்பாக பாகிஸ்தானிய உளவியலாளர் ஒருவர் தொலைக்காட்சிக்கு அளித்தபேட்டியில் "டென்மார்க்கில் இருவகைக் குழுவாக பாகிஸ்தானியர் வாழ்ந்துவருகின்றனர். ஒன்று உயர்தொழில்பார்ப்பவர்களாகவும்,மற்றைய குழுவினர் சாதாரண தொழிலாளர்களாகவும் வியாபாரம் செய்பவர்களாகவும் இருக்கின்றனர். இத்தகைய முரண்பாடுகளின் விரிசல்களே இன்றைய இப் பிரச்சனையை தோற்றுவித்துள்ளது" என்கின்றார்.

இவை ஒருபுறமிருக்க இந்த பிரச்சனைக்குரிய இரண்டாவது சந்ததியினர் தமது உரிமைகளுக்காக டெனிஸ் சமூகத்தில் எதிர்ப்புத் தெரிவித்து வருவதும் கூர்ந்துநோக்கத்தக்கது ■



படிப்பகம்

www.padippakam.com

"Postbesørget blad, (0900 KHC) " -51033

TIl: Thevan
Dyssegården 7
7500 Hol

Afs: Tuli Publication Baunehøjen 35, 3320 Skævinge, Denmark

படிப்பகம்